12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு
<u>சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் அருளியது</u>

# இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் ஆங்கில மற்றும் வடமொழிகள் பற்றிய கொள்கை விளக்கங்கள்.





இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**
(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் சமாது கொண்டருளுபவர்)

ஓம் குருவே போற்றி! ஓம் குரு குரு வாழ்க! ஓம் குருவே எல்லாம்!

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,119 ஆடி மாதம்.

## இந்து இலக்கியக் கழகம்

காணிக்கை: ரூ 10/-

# <u>உள்ளுறை</u>

**1. திருச்சி விரகாலூர் நாகராசு அடிகளார் அவர்களுக்கு குருதேவர் அவர்கள் 1983இல் எழுதிய நட்பு நாடும் திருமடல்.**

**2. இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் ஆங்கில மொழி பற்றிய விளக்கம்.**

**3. இந்தி மொழி பற்றிய கொள்கை விளக்கம்.**

**4. இ.ம.இ.யின் சமசுக்கிருத மொழி பற்றிய கருத்து.**

**5. தமிழ் வழி இன விடுதலை - கவிஞர் ஆண்டான் என்ற பெயரில் சித்தர் காகபுசுண்டர் திரு ம.பழனிச்சாமி பிள்ளை அவர்கள் எழுதிய கவிதை.**

---

“சித்தர் நெறி, இம்மண்ணுலகுக்கும் முன்பே பிறந்தது. சித்தர்கள் தோன்றித் தோன்றி மறைவார்கள், நிறைவார்கள். அப்போதைக்கப்போது பித்தர்கள், எத்தர்கள் சித்தர் நெறியைச் சிதைக்க முயல்வர். அது அறுவடைக்குப் பின் உழுது விதைப்பது போல் அடுத்தடுத்துத் தோன்றும் சித்தர்களைச் செயல்படச் செய்யும்”

**- குருபாரம்பரிய வாசகம்.**

**குருதேவர் அவர்களின் அஞ்சல் திரட்டிலிருந்து எடுக்கப்பட்ட சில வரிகள்.**

ஓம்

ஓம் தாத்தா கருவூருரே போற்றி!

10/7/83,

பெரம்பூர், சென்னை-11.

# <u>நட்பு நாடும் திருமடல்</u>

பேரார்வமும் உழுவலன்பும் மிக்க Dr. V.நாகராசு [விரகாலூர் (P.O.), திருச்சி Dt - 621722] அவர்கள் சமூகத்திற்கு இன்றைய பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரர் 10.7.83இல் வரையும் **<u>நட்பு நாடும் திருமடல்</u>**.

1) தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருளால் தாங்கள் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு எம்மைப் பற்றிக் கேள்விப் பட்டதிலிருந்து எம்மைச் சந்திக்கப் பல பெரிய முயற்சிகள் செய்திருக்கிறீர்கள். ஆனால், விதியாலும், ஊழாலும் அம்முயற்சி நிறைவேறவில்லை. இருந்தாலும் தாங்கள் 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்ற மூதுரைப்படி தொடர்ந்து முயன்று எம்மோடு அஞ்சல் தொடர்பு கொள்வதில் பெரு வெற்றி பெற்றுள்ளீர்கள். இது, தங்களின் பொறுமையையும், பொறுப்புணர்ச்சியையும், ஆர்வத்தையும் நன்கு விளக்குகின்றது. எனவே, தங்களை வாழ்த்தி அருளாட்சி அமைக்கும் பணிக்கு அழைக்கின்றோம். வாழ்க நீவிர்! வளர்க நும் பணிகள்!

2) ஐயா! தங்களின் 31.5.83, 26.6.83 ஆகிய இரு அஞ்சல்களும் தங்களின் விருப்பங்களை விளக்கி உரைத்துள்ளன. மகிழ்ச்சி. நன்றி!

**‘தமிழினத் தலைவர் தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் வளர்த்த நாத்திகம் நாடாளுகின்ற நிலைக்கு வளர்ந்திருக்கின்ற போது; ஏன் சித்தர்களால் உருவாக்கப்பட்ட ஆத்திகம் நாடாளுகின்ற நிலைக்கு வரக்கூடாது?’** என்ற வினவுக்கு விடை தேடியே அருளாட்சி அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம் நாம். ஆனால், அருட்செல்வர்களும், அருளுலக அநுபவசாலிகளும், அருளுலக ஆர்வலர்களும் தங்கள் தங்களின் சொல் வளத்துக்கும், செல்வ வளத்துக்கும் ஏற்ப சிறிய சிறிய, பெரிய பெரிய வட்டாரங்களை விரிவாக்கிக் கொண்டு அதற்குள்ளேயே தனித்து நின்று செயல்படுபவர்களாக இருக்கிறார்கள்.

அதாவது, இந்த அருளாளர்கள் ஒன்றுகூடி ஒற்றுமைப்பட்டு நாடு தழுவிய பெரிய அளவில் மக்களுக்குத் தொண்டாற்றும் நிலை கடந்த ஆயிரமாண்டு இடைவெளியில் ஏற்படவேயில்லை. மேலும், மதத்துக்கு என்று ஏற்பட்டுள்ள மடங்கள், பீடங்கள், ஆதீனங்கள், சன்னிதானங்கள்... முதலிய நிறுவனங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டும், மாறுபட்டும், வேறுபட்டும், போட்டி போட்டுக் கொண்டு பொறாமை உணர்வோடு செயல்படுவனவாகத்தான் இருக்கின்றன. இவைகளுக்கிடையில் ஒற்றுமை ஏற்படவோ! ஒருமுனைப்பான செயல்நிலை உருவாகவோ! வழியே இல்லை. ஏனெனில், இந்த நிறுவனங்களுக்கு வலுவான நிர்வாக ஒழுங்கமைப்புகள் வெளிப்படையாக இல்லை. இவற்றிற்கெல்லாம் மேலாக ஆரியக் கற்பனைகளும், வேதவிதிகளும், சாத்திற சம்பிறதாயங்களும், சடங்குகளும் இந்துக்கள் ஒன்றுகூடி அந்தந்த வட்டாரங்களில் கூட்டு வழிபாடு நிகழ்த்துவதற்கு இடமே இல்லாமல் செய்துவிட்டன.

இந்நிலைகள் இந்துக்களுக்குப் புதியன அல்ல! ஏனெனில், இதே இழிநிலைகளால்தான் தமிழகம் பல்லவர்களுக்கும், களப்பிறர்களுக்கும், மற்றவர்களுக்கும் சமய, சமுதாய, அரசியல் துறைகளில்

அடிமைப்பட்டுக் கிடந்தது. அப்பொழுதுதான், தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் தோன்றி தமிழ்மொழி வழியில் இந்துமத விழிச்சியையும், எழுச்சியையும் உண்டாக்கி மதப்புரட்சியைச் செய்தார். அந்த மதப்புரட்சியால் இந்துமத மறுமலர்ச்சி ஏற்பட்டது. அதற்காக இந்துமதத் தத்துவங்களும், கலைகளும், கலைக்கோயில்களும், கலைக் கருவூலமான இலக்கியங்களும், பிற கலைகளும் வளமான வளர்ச்சியைப் பெற்றன. இந்த வளர்ச்சியை ஒட்டியே பிற்காலச் சோழப் பேரரசு [கி.பி.785 முதல் கி.பி.1279 முடிய] தோன்றி வளர்ந்து வாழ்ந்து ஓய்ந்தது.

அதாவது, இந்துமதத்தின் வீழ்ச்சியோடு, தமிழ் மதத் துறையிலிருந்து புறக்கணிக்கப்பட்டபோது; தமிழுக்கு ஆட்சி செல்வாக்கு குறைந்ததோடு தமிழ்வழியில்தான் இந்துமத மறுமலர்ச்சி ஏற்பட்டது என்ற பேருண்மை மறக்கப்பட்டதோடு, மறுக்கப்பட்டதோடு ... படிப்படியாகச் சோழப் பேரரசு தாழ்ச்சியடைந்து வீழ்ச்சியடைந்தது. எனவேதான், யாம், அண்டபேரண்ட அருள்துறை அரியணையில் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாக அமர்ந்த நாள் முதல் தமிழ்மொழி வழியாகத்தான் இந்துமத மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியும்; இந்துமத மறுமலர்ச்சியின் மூலம்தான் மதவழிப் புரட்சியை செய்து மக்களின் ஏக்கங்கள், தேக்கங்கள், வீக்கங்கள், ஏமாற்றங்கள், எரிச்சல்கள், பற்றுக்குறைகள், இல்லாமைகள், இயலாமைகள், வறுமைகள், ஏற்றத் தாழ்வுகள் ... முதலிய அனைத்தையும் முழுமையாக அகற்ற முடியும்! அகற்ற முடியும்! அகற்ற முடியும்! என்று முடிவெடுத்துச் செயல்படுகின்றோம்.

இதற்காகவே யாம், கற்றவை, நோற்றவை, பெற்றவை, உற்றவை, ஏற்றவை ... முதலிய அனைத்தையும் நாடு, இனம், மொழி, சமயம், வட்டாரம், ... முதலிய வேறுபாடுகளைப் பார்க்காமல்

இறைமைச் சத்திகளை, சித்திகளை, முத்திகளைப் பெற்றிடும் அருளாளர்களை உருவாக்கி வருகின்றோம். இந்த அருளாளர்கள் மலைமுகடுகள், அடவிகள், அடர்காடுகள், படுகைகள், குகைகள், அலைகடலிடைத் தீவுகள், நாடு நகரங்கள், பேரூர்கள், சிற்றூர்கள், பெரும் கிராமங்கள், குக்கிராமங்கள் ... என்று எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறார்கள். இவர்கள் பூசைமொழி வாசகங்களிலும், பூசைமணி ஓசைகளிலும், பூசைக் கற்பூர ஒளிகளிலும் மோன இன்பம் கண்டு ஞான தவத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள். எந்த நேரத்திலும் திருவுள ஒப்புதல்களால், தாத்தாக்கள் ஆத்தாக்கள் சம்மதங்களால், குருவாணைகளால் இவர்கள் தட்டி எழுப்பப் படுவார்கள். அப்பொழுது இவர்கள் இந்துமதத்தின் போர்க்கோலக் கடவுள்களாக மாறுவார்கள். பண்டு நிகழ்ந்த கந்தபுராணப் போர், இராமாயணப் போர், மகாபாரதப் போர் ஆக மூன்றும் ஒருங்கிணைந்து நடக்கும். முடிவில் நீதி பிறக்கும். அந்த நீதியின் சத்தியால் பதினெண்சித்தர்கள் கூறுகின்ற “சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்” உருவாகி விடும். இதனால், “மக்கள் தொண்டே மகேசன் தொண்டு” என்ற சித்தர்களின் கொள்கை செயலாகிடும்.

இவற்றையெல்லாம் எண்ணித்தான் இன்றைக்கு எம்மைச் சுற்றியிருக்கின்ற படிக்கின்ற, படித்த இளைஞர் கூட்டம் ‘**<u>இந்து மறுமலர்ச்சி இயக்கத்தை</u>**’ப் பதிவு செய்திருக்கின்றது. எம்மோடு தொடர்பு கொள்கின்ற அனைவருக்கும் அந்த வட்டாரத்தில் அவரவர் செல்வாக்குப்படி - “இந்து மறுமலர்ச்சி இயக்கம் பதிவு எண் 135/ 1983, கிளை அலுவலகம்” என்று பெயர்ப்பலகை எழுதி வைத்து; ஒரே கம்பத்தில் இரண்டு மெய்ஞ்ஞானக் கொடிகள் ஏற்றி [இதுதான் நமது இயக்க மரபு] இ.ம.இ. நிறுவனங்களை உண்டாக்கிப் பாடுபடும்படி அழைப்பு விடுக்கப்படுகின்றது. தாங்களும் தங்களால் முடிந்தவரை கிளை அலுவலகங்களைத் தோற்றுவிக்க வேண்டும். அரசியல் இயக்கங்களில் இருப்பதுபோல்; தலைவர், செயலர், பொருளாளர்,

அங்கத்தினர்கள் பதிவு ஏடு (Note-book), வரவுசெலவுக் கணக்கு, கூட்டம் நடவடிக்கைப் பதிவு ... முதலியவைகளைப் பதிவு செய்ய வேண்டும். உழைப்புக்கேற்ப உங்களுக்குப் பொறுப்பான பதவி தரப்படும். உடன் பதிலனுப்புக.

ஓம் திருச்சிற்றம்பலம்.

அன்பே சிவம்.

**அன்பு**
**ஞாலகுரு சித்தர் கருவூரர்,**
10/7/83.

<u>நகல் எடுத்தவர்:</u>

அருள்மிகு கஞ்சமலை காளாங்கிநாதர் சன்னிதானம், சித்தரடியான் இல.க. கணேசன்,

2/71-1 மெயின் ரோடு, வேம்படிதாளம் (அஞ்சல்), சேலம் மாவட்டம், - 637504.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: வேம்படிதாளம் சித்தரடியான் திரு இல.க.கணேசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

## இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கொள்கை விளக்கம்

# ஆங்கில மொழி பற்றிய விளக்கம்

(1) 26-1-1959 இன்று குடியரசு தினம் நாடெங்கும் கொண்டாடப் படுவதால் இந்தியத் துணைக் கண்டம் என்று ஆங்கிலேயரால் உருவாக்கப் பட்ட செயற்கையான ஒரு பெரிய நாடு தொடர்ந்து ஒரே நாடாக இருக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தால் இந்த அறிக்கையை எழுதுகிறோம், இ.ம.இ.யின் தலைவராகிய காக்காவழியன் பண்ணையாடி சித்தர் காகபுசுண்டர் எனும் காக்கையர் ம.பழனிச்சாமி பிள்ளையாகிய யாம்.

இந்தச் சனவரி மாதம் பிறந்தது முதல் எனது அறிவார்ந்த நண்பர்களும், தோழர்களும், தாங்கள் சார்ந்துள்ள சமய சமுதாய அரசியல் கட்சிகளை மறந்து எம்மோடு கருத்துப் பரிமாற்ற விவாதங்களை நேரிலும், அஞ்சல் மூலமும் நிகழ்த்தியதின் பயனாகவே; இந்த ஆங்கில மொழி பற்றிய கொள்கை விளக்கம் எழுதப் படுகிறது. விரைவில் இதனை அச்சிட்டு ஆங்கிலத்திலும், தமிழிலும் இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் அனுப்புவோம் யாம்.

அதற்கு முன் எமது நண்பர்களின் விருப்பப்படி கையெழுத்து நகலெடுக்கும் இயந்திரத்தின் மூலம் (Cyclostyle Machine) நூற்றுக்கணக்கான பிறதிகளைத் தயாரித்து இந்தியத் துணைக்கண்டம் முழுவதுமுள்ள தமிழர்களுக்கும், வெளிநாடுகளிலுள்ள தமிழர்களுக்கும் (செர்மனி, இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆசுத்திரேலியா, மலேசியா, தாய்லாந்து, இலங்கை, சப்பான், ...

முதலிய நாடுகளில்தான் அதிகமான நண்பர்கள் எமக்கு உள்ளார்கள்.) அனுப்பி வைக்கப் போகிறோம்.

எமது இந்த முயற்சி, யாம், இந்திய அரசியல் வாழ்விலும், சமுதாய வாழ்விலும் மிகமிகப் பெரிய தோல்விகளைப் பெற்று இலைமறை காயாகச் செயல்பட ஆரம்பித்தாலும், எமது கடமையைப் பொறுப்பாகவும், பொறுமையாகவும், நிதானமாகவும், அடக்கமாகவும், அமைதியாகவும் தொடர்ந்து செய்து வருகிறோம் என்ற பேருண்மையை விளக்குவதாகவே அமைகிறது. ஏனெனில், எமது தாயகத்து இன மக்களான தமிழர்கள் மிக நெடுங்காலமாக ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறார்கள். (இவர்களைத் தட்டியெழுப்புவது என்பது எந்த பரபரப்பான செயலாலும் இயலாது, இயலாது, இயலாது, இயலவே இயலாது.) மேலும் கால் நூற்றாண்டுக் காலத்திற்கும் மேலாக இவர்களைச் சிறுகச் சிறுகத் தட்டியெழுப்பும் முயற்சியினை பல்வேறு துறைகளின் கூட்டு முயற்சியாகத்தான் உருவாக்க முடியும்.

அதாவது இவர்கள் பல்வேறு மதங்களாலும், கணக்கற்ற சாதிகளாலும், கணக்கற்ற வட்டார வெறிகளாலும், வாழ்வியலால் ஏற்றுக் கொண்ட மொழி வெறிகளாலும், எதிர்பாராமல் தாங்களே ஏற்றுக் கொண்டிட்ட கட்சி வெறிகளாலும், பல்வேறு தேவைகளின் காரணமாக ஏற்றுக் கொண்டிட்ட தமிழரல்லாத முதலாளிகளிடம் காட்டுகின்ற வெறி நிறைந்த நன்றி உணர்ச்சிகளாலும், நெடுங்காலமாக வீழ்த்தப்பட்டுக் கிடக்கின்ற தாழ்ச்சி உணர்ச்சிகளாலும், தன்னம்பிக்கையற்ற கோழை உணர்வுகளாலும், அடிமைச் சிந்தையுடைய ஏழையான வாழ்க்கை நிலைகளாலும், அப்பாவியான ஏமாளிப் பண்புகளாலும்; நெடுங்காலமாக அன்னியர்களையே தங்கள் தலைவர்களாக, குருமார்களாக, சாத்திரிகளாக, வழிகாட்டிகளாக, கலைஞர்களாகப் பெற்றே ஒற்றுமையற்ற வாழ்க்கை வாழுபவர்களாக இருந்து வருகின்றார்கள்.

எனவே, எனது தாய்த்திரு நாட்டு மக்களான தமிழர்களுக்கிடையில் இருக்கின்ற வேற்றுமைகளேயும், வேறுபாடுகளேயும், மாறுபாடுகளேயும், முரண்பாடுகளேயும், ஏற்றத்தாழ்வுகளேயும், பிரிவினைகளேயும், மோதுதல்களேயும், வெறிநிறைந்த குறுகிய நோக்குகளேயும் போக்குகளேயும் முழுமையாக முறியடிக்கும் **பண்பாட்டுப் புரட்சி** (Only the Total Cultural Revolution can alone eradicate the ills and evils of the Tamils) நிகழுவதற்குரிய நிலேயான பணிகளேச் செய்ய வேண்டிய நிலேயிலேயே இருக்கிறோம் யாம். எனவேதான், 'பிருமணர் ஒழிக!', 'ஆரிய மாயை ஒழிக!', 'பார்ப்பனர் ஆதிக்கம் ஒழிக!', 'வடநாட்டார் சுரண்டல் ஒழிக!', 'இந்தி ஆதிக்கம் ஒழிக!', 'பனியாக் கும்பலின் சுரண்டல் ஒழிக!', 'இந்துமத மடமைகள் ஒழிக!' ..... என்றெல்லாம் முழக்கமிடும் சமுதாயவாதிகளுடன் சேரமுடியாத நிலேயிலிருக்கிறோம் யாம்.

இது போலத்தான் யாம், 'தமிழ் வாழ்க!', 'தமிழினம் வெல்க!', 'மாநில சுயாட்சி ஓங்குக!', 'இந்தி ஒழிக!', 'வடநாட்டார் சர்வாதிகாரம் ஒழிக!', 'வடநாட்டுக் கங்காணிக் காங்கிரசு ஒழிக!', 'மக்களே மடமையில் ஆழ்த்தும் காந்தீயம் ஒழிக!', 'தமிழக உரிமைகளேப் பறிக்கும் வடநாட்டார் ஆட்சி ஒழிக!', 'இந்தியக் கூட்டாட்சி மலர்க!', 'முதலாளித்துவம் ஒழிக!', 'இந்திப் பாசிசம் ஒழிக!', 'பொதுவுடமை ஓங்குக!', 'தமிழர் ஒற்றுமை ஓங்குக!' ..... என்றெல்லாம் வீர முழக்கமிடுகின்ற அரசியல்வாதிகளோடும் சேர முடியாத நிலேயில் இருக்கிறோம் யாம்.

அதாவது தமிழர்கள் விழிச்சி பெறவும், எழிச்சி பெறவும், கிளர்ச்சி உணர்ச்சியில் வளர்ச்சி பெறவும், புரட்சி முயற்சியில் பயிற்சி பெறவும், எத்தகைய அரிய பெரிய தத்துவங்களும், செயல் சித்தாந்தங்களும் முன்னின்று பாடுபட்டாலும் கூட அதற்குக் கால் நூற்றாண்டுக்கால இடைவெளி அவசியம் தேவை. இதையுணர்ந்தே யாம் வெறியாட்டம் போடும் போலிக் கூட்டங்களிலிருந்து

விலகியிருக்கிறோம். அப்பொழுதுதான் தமிழர்களை மேம்படுத்தக் கூடிய சமய, சமுதாய நிறுவனங்கள், திருச்சபைகள், கலைக் கழகங்கள் ..... முதலியவற்றைத் தோற்றுவிக்க முடியும் எம்மால்.

இதற்காகவே யாம் மிகத் தெளிவான வரையறுக்கப்பட்ட, முறைப்படுத்தப்பட்ட ஒரு கல்வித் திட்டத்தை உருவாக்கியிருக்கின்றோம். இந்தக் கல்வித் திட்டம் நல்ல ஏட்டறிவையும், பட்டறிவையும் பயிற்றுவித்திடும். அதன் மூலம், தமிழர்கள் தங்களுடைய கடந்த கால, நிகழ் கால, வருங்கால நிலைகளை எல்லாம் மிகத் தெளிவாக உணர்ந்திடுவர். அப்படித் தமிழர்கள் தங்களை நன்கு உணர்ந்திட்டால்தான் அவர்களை மீண்டும் ஒற்றுமைப் படுத்தி, வலிமைப் படுத்தக் கூடிய இணைப்புச் சத்தியை தேர்ந்தெடுக்கக் கூடிய நிலை பிறந்திடும்.

(I am keeping myself far away from the mobbing crowd in order to cultivate institutions, missionaries and congregations for the welfare and uplift of the Tamils. And I have formed a clear and finite curricular system to teach and to train up the Tamils to do everything in an organised form such that they must know their past, present and future positions in all respects. Then only they can have self-confidence, self-respect, social strength, political awareness and linguistical affinity in a religious atmosphere and scientific approach. It is inevitable that the Tamils must have a unifying force or a cementing force. That force can be either social, political or religion. Then they must understand that the religion can alone produce a re-unity and re-strength -- *taken from the writings of Mr M.P.Pillai Siddhar Kaakkaiyar.*)

அந்த இணைப்புச் சத்தி தமிழ்மொழியாக இருப்பதை விட இந்துமதமாகத்தான் இருக்க முடியும். எனவேதான், இவையனைத்திற்கும்

ஆங்கில மொழி வழியாகவே நிலையான பயன்கள் விளைந்திடும் அல்லது விளைவிக்க முடியும் என்ற பேருண்மையை விளக்கவே இந்தக் கட்டுரையை எழுதுகிறோம்.

(2) ஒரு காலத்தில் இந்த இந்துமத நாடான இந்தியா எனும் துணைக் கண்டம் ஐம்பத்தியாறு தேசங்களாகப் பிரிந்து கிடந்தது. இதனை இந்த நாட்டின் பூர்வீகக் குடியான தமிழர்கள் (The Tamils are the aboriginates of the India) அவ்வப்பொழுது சேரப் பேரரசாகவும், சோழப் பேரரசாகவும், பாண்டியப் பேரரசாகவும் ஒன்று சேர்ந்திட்டார்கள். இவர்களில் வல்லமை பெற்ற பேரரசர்கள் மறைந்தவுடன் அவிழ்த்துக் கொட்டப்பட்ட நெல்லிக்காய் மூட்டை போல இமயம் முதல் குமரி வரை ஒருங்கிணைக்கப்பட்ட பேரரசுகள் அதன் பேரரசர்கள் மாண்டவுடன் மாண்டவுடன் ஐம்பத்தியாறு தேசங்களாகச் சிதறியோடின. அப்படி ஓடியவைகளை மீண்டும் மீண்டும் ஒருங்கிணைத்து இமயம் முதல் குமரி வரை ஒரு குடைக்கீழ் ஆண்ட தமிழ்ப் பேரரசர்கள் மூவேந்தர்க்குள்ளும் தோன்றிக் கொண்டுதான் வந்திருக்கிறார்கள்.

இதைப் போலவே முகமதியப் பேரரசர்கள் இந்தியத் துணைக் கண்டத்தின் பெரும் பகுதியினை இணைத்து ஒரு குடைக்கீழ் ஆண்டிட்டார்கள். அவர்களை அடுத்து ஆங்கிலேயர்கள் இந்தியத் துணைக் கண்டம் முழுவதையும் ஒருங்கிணைத்து ஒரு குடைக்கீழ் ஆண்டார்கள். இந்த ஆங்கிலேயர்கள்தான் தங்கள் ஆங்கில மொழிக் கல்வி வாயிலாக மருத்துவம் (Medicine), பொறியியல் (Engineering), வரலாறு (History), தத்துவம் (Philosophy), தாவரவியல் (Botany), விலங்கியல் (Zoology), வேதியியல் (Chemistry), பௌதீகம் (Physics), இலக்கியம் (Literature) முதலிய பல துறைகளை முறையான கல்வியாக (A proper education) கல்விக் கூடங்களின் மூலம் வழங்கினார்கள். அப்படி இவர்கள் ஆங்கில மொழி வாயிலாக வழங்கிய கல்விதான் இந்தியா முழுவதும் ஒற்றுமையையும், செழித்த

உணர்வையும், இந்தியா என்ற நாட்டுணர்வையும், இந்தியர் என்ற இந்துமத உணர்வையும் (இந்துக்கள் = இந்தியா) வளர்த்தது. எனவே இந்தியத் துணைக்கண்டம் என்ற ஒரு நாடு புவியியல் படத்தில் (Atlas) என்றென்றும் இருக்க வேண்டுமேயானால் ஆங்கில மொழிதான் இந்தியாவின் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும்.

(3) ஆங்கில மொழிதான் இந்திய விடுதலை தேசிய உணர்வை முளைத்துக் கிளைத்துச் செழித்து வளரச் செய்தது. இன்றைக்கும் அகில இந்தியத் தலைவர்களும், அரசியல் சாசனங்களும் ஆங்கில மொழியின் வாயிலாகத்தான் செயலாகி வருகின்றன. இந்தி மொழிக் காரர்களுக்கு ஆங்கில மொழி படிப்பது சிரமமாக இருக்கிறது என்ற ஒரே ஒரு காரணத்தினால்தான் இந்திக் காரர்கள் ஆங்கிலத்தை மறுத்தும், வெறுத்தும், எதிர்த்தும் அழித்தொழிக்க முயற்சி செய்து வருகின்றனர்கள்.

யானை நீராடி விட்டுத் தன் தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொள்வது போல இந்திய விடுதலையைப் பெற்றிட்ட காங்கிரசுக் காரர்கள் இந்தி மொழி என்ற மண்ணைத் தங்கள் தலையில் வாரிப் போட்டுக் கொண்டிருக்கின்றனர்கள். எனவே, விரைவில் இந்தி வெறியால், இந்தி ஆதிக்கத்தால், இந்திக் காரர்களின் சர்வாதிகாரப் போக்கால் விடுதலை பெற்ற இந்தியத் துணைக் கண்டம் மொழி வாரி நாடுகளாகத் துண்டு துண்டாகப் பிரிந்து சிதைந்து ஓடிவிடும். அதைத் தடுக்கக் கூடிய ஆற்றல் ஆங்கில மொழிக்குத்தான் உண்டு.

(4) தமிழ்நாட்டுக் காங்கிரசுக் காரர்கள் வடநாட்டுக் காங்கிரசுக் காரர்களைத் தங்கள் எசமானர்களாக, அரசர்களாக, முதலாளிகளாக, கடவுள்களாக, சர்வாதிகாரிகளாக நினைத்து நடுநடுங்கி; நன்றியும், விசுவாசமும் உள்ள கூலிக்காரர்களாகவே வாழ்ந்து வருகின்றனர்கள். எனவேதான் தமிழ்நாட்டுக் காங்கிரசுக் காரர்கள் தங்கள் தாய்மொழியான தமிழ்மொழியும், இந்தியாவின் ஆட்சிமொழியாக அறிவிக்கப் பட வேண்டும் என்று உரிமைக் குரல் எழுப்பவே இல்லை, இல்லை,

இல்லே, இல்லவே இல்லே. இதுதான் இந்தத் தமிழ்நாட்டுக் காங்கிரசுக் காரர்கள் தமிழ்நாட்டு மக்களுக்குச் செய்த மிகப் பெரிய துரோகச் செயல், விரோதச் செயல், அநீதிச் செயல், அக்கிரமச் செயல், கொடுஞ் செயல், பெரிய பழிச் செயல், மிகமிகக் கேவலமான இழி செயல்.

அதாவது தமிழகத்துக் காங்கிரசுக் காரர்கள் அளவுக்கு மீறிய கட்சி விசுவாசிகளாகவும், பத்தர்களாகவும், அடிமைகளாகவும் வாழ்ந்து தங்களுடைய மொழியையும், இனத்தையும், நாட்டையும் அடிமைச் சேற்றில் அழுத்திச் சித்திரவதை செய்து விட்டார்கள். இதற்குரிய தண்டனேயை இவர்கள் அடைந்தே தீருவார்கள். அதாவது கட்டாயமாக மிக விரைவில் இக் காங்கிரசுக் காரர்கள் தமிழக அரசியலில் செல்லாக் காசுகளாகி விடுவார்கள், எந்தவித உரிமையும் பெருமையும் இல்லாத அனுதைகளாகிடுவார்கள். ஒருவேளே காங்கிரசு என்ற பெயரைக் கூறவே கூச்சப்படுபவர்களும், அச்சப்படுபவர்களும், வெட்கப்படுபவர்களும், வேதனேப்படுபவர்களும் தமிழகத்தில் மிகுந்து விடக் கூடிய காலக்கட்டமே தொடர்ந்து தமிழின விடுதலே வரை நீடித்திட நேரிடலாம்.

(5) தமிழர்களேப் பொறுத்தவரை சமசுக்கிருத மொழி, இந்தி மொழி, ஆங்கில மொழி ஆகிய மூன்று மொழிகளும் அன்னிய மொழிகள்தான். எனவே, இந்த மூன்று மொழிகளில் எந்த ஒரு மொழியைக் கற்றுக் கொண்டால் இந்தியக் கூட்டாட்சிக்கும், உலகத் தொடர்புக்கும், அறிவியல் வளர்ச்சிக்கும் பெரிய அளவில் பயன் ஏற்பட்டிடும் என்று சிந்தித்து முடிவெடுப்பதுதான் நல்லது. ஆனுல், நமது தமிழகத்துக் காங்கிரசுக் காரர்கள் ஆங்கில மொழி ஒன்றைத்தான் அன்னிய மொழி என்று விளம்பரப் படுத்தி; அதனே எதிர்க்கவும், மறுக்கவும், வெறுக்கவும் முற்படுகிருர்கள். இதைவிடப் பெரிய முட்டாள்தனம், பைத்தியக்காரத்தனம், கோமாளித்தனம், ஏமாளித்தனம்,

தற்கொலை முயற்சிச் செயல் வேறெதுவும் இருக்க முடியாது, முடியாது, முடியாது, முடியவே முடியாது.

ஏனெனில், ஆங்கில மொழிதான் தமிழ் மொழியின் தன்மைகள் வேறு, வடஇந்தியாவிற்குரிய வடமொழிக்கான சமசுக்கிருதம், இந்தி முதலியவற்றின் தன்மைகள் வேறு என்று மிகத் தெளிவாக விளக்கமாக வரையறுத்துக் காட்டிற்று. அது மட்டுமல்ல, இந்த ஆங்கில மொழிதான் **வடமொழியான சமசுக்கிருதம்தான் தமிழ்மொழியைப் பெரிய அளவில் சிதைத்துச் சீரழித்துச் செயல்நலம் குன்றச் செய்தது** என்ற பேருண்மையினை எண்ணற்ற சான்றுகளையும், ஊன்றுகளையும் பட்டியலிட்டுக் காட்டியதன் மூலம் தமிழ்ப் புலவர் பெருமக்களை விழிப்படையச் செய்தது.

இவற்றிற்கெல்லாம் மேலாக இந்த ஆங்கில மொழிதான் தனித்தன்மையுடைய தமிழ் மொழியிலிருந்து தோன்றிய கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு, கொங்கணம் முதலிய மொழிகள் அனைத்தையும் பட்டியலிட்டு இவையனைத்தையும் திராவிடக் குடும்பத்தைச் சார்ந்தவை; இவை சமசுக்கிருத மொழியிலிருந்து தோன்றிய வடஆரிய மொழிகளால் நோயுற்று விட்டன என்ற பேருண்மையை விளக்கியுரைத்தது.

இந்த மொழியியல் பேருண்மைகளால்தான் (The Linguistical facts and figures only awakened the Tamils and made them to fight against the domination of the Brahmins and the Sanskrit) தமிழர்கள் விழிச்சியடைந்தார்கள். தங்களை அடக்கி ஒடுக்கி அறியாமையில் ஆழ்த்தி ஆட்சி செய்திட்ட பிருமணர்களையும், சமசுக்கிருத மொழியையும் எதிர்த்துப் போராடச் செய்தது.

எனவே, தமிழன் மீண்டும் ஆரிய மாயையில் சிக்கிக் கொள்ளாமலிருக்கவும், பிருமணர்களின் சூழ்ச்சி மிக்க சுரண்டலுக்குரிய சர்வாதிகார அடக்கு முறைக்குள் அகப்படாமலிருக்கவும்;

தமிழ்மொழியை நோய்நிலைக்கும், தேய்நிலைக்கும் உள்ளாக்கிய சமசுக்கிருத மொழியிடம் மீண்டும் தமிழ்மொழி சித்திரவதைப் படாமலிருக்கவும் வேண்டுமேயானல் ஆங்கில மொழியையும், தமிழ் மொழியையும் இரு கண்களாக, கால்களாகக் கொண்டுதான் வாழ வேண்டும் தமிழர்கள்.

அதாவது ஆங்கில மொழிதான் தமிழர்களுக்குச் சுயமரியாதை உணர்வையும், தன்மான உணர்வையும், இனமான உணர்வையும், தன்னம்பிக்கை உணர்வையும், இனப் பற்றையும், மொழிப் பற்றையும், நாட்டுப் பற்றையும், பண்பாட்டுப் பிடிப்பையும், இந்துமத ஒற்றுமையையும், இலக்கிய அறிவு வளத்தையும் வளர்த்தது, வளர்த்தது, வளர்த்தது என்ற பேருண்மையை உணர்ந்து ஒவ்வொரு தமிழனும் கட்டாயமாக ஆங்கில மொழி கற்றுக் கொண்டாக வேண்டும். அதாவது, ஆங்கில மொழியை தமிழ்மொழிக்குச் சமமாக ஏற்றுப் போற்றிக் கற்று வளர்ந்தால்தான் தமிழன் தமிழனாக உரிமையோடும், பெருமையோடும், வீரியத்தோடும், விடுதலையோடும், விவேகத்தோடும், நல்வாழ்வு வாழ முடியும், வாழ முடியும், வாழ முடியும்.

இந்தியும், சமசுக்கிருதமும் பிணந் தின்னும் காக்கைகள் போல் உயிருள்ள கன்னித் தமிழைக் கொத்திக் கொத்திக் காயப்படுத்திக் குருதியைக் குடித்தும், சதையைத் தின்றும், தன்னுடைய கோரப் பசியைத் தீர்த்துக் கொள்ளத்தான் முயலும். எனவே, **“அருளுலகில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்”** என்ற குருபாரம்பரிய வாசகத்தையும்; **“அரசியலிலும், அலுவலகத்திலும், கல்வியிலும், கலையிலும் இந்தி மொழியை ஏற்றுக் கொள்வது தற்கொலைக்குச் சமம், வருங்காலத்தை இருள் நிறைந்த இன்னல் மயமாக்கிடும், என்றென்றும் தமிழர்களைக் கோழைகளாகவும், ஏழைகளாகவும், எடுபிடிகளாகவும், நாடோடிகளாகவும், அடிமைகளாகவும், பிச்சைக் காரர்களாகவுமே வாழச் செய்திடும், வாழச் செய்திடும், வாழச் செய்திடும்”** - என்ற கண்டப்பக்

கோட்டைச் சித்தர் ஏளனம் பட்டியார் உ.இராமசாமிப் பிள்ளை அவர்களின் அறிவார்ந்த அருளுரை வாசகத்தையும், தமிழர்கள் தங்களின் உள்ளங்களிலும், இல்லங்களிலும், தெருக்களிலும் இரண்டு பேருக்கு மேல் கூடுகின்ற எல்லா வகையான நிலையங்களிலும் எழுதி வைக்க வேண்டும், எழுதி வைக்க வேண்டும், எழுதி வைக்க வேண்டும். அப்பொழுதுதான் சமசுக்கிருத மொழியையும், இந்தி மொழியையும் எதிர்த்துக் கடும்போர் நிகழ்ந்திடும். இந்தப் போரின் ஆயுதமே ஆங்கில மொழி.

எனவே தமிழினப் பண்பாட்டு விடுதலை அல்லது மத மறுமலர்ச்சி அல்லது இன விடுதலை அல்லது மொழி விடுதலை ஆங்கில மொழியால்தான் காப்பாற்றப் பட்டிடும், காப்பாற்றப் பட்டிடும், காப்பாற்றப் பட்டிடும். எனவே, ஆங்கில மொழியைப் போர் வீரர்களின் ஆயுதமாகவும், கவசமாகவும் பயன்படுத்த வேண்டும், பயன்படுத்த வேண்டும், பயன்படுத்த வேண்டும் என்ற கருத்தை மட்டும் வலியுறுத்தி இக்கட்டுரையை நிறைவு செய்கிறோம் யாம்.

**சித்தர் காகபுசுண்டர் எனும் காக்கையர்**
**ம.பழனிச்சாமி பிள்ளை அவர்கள்.**
**இ.ம.இ.யின் இரண்டாவது தலைவர்.**
26-1-1959.

<u>நகலெடுத்தவர்</u>: ஆதரவாளர் K.நாராயணன்.

**//உண்மை நகல்//**

**//மூலம்: திரு K.நாராயணன் அவர்களின் கையெழுத்தில் இருந்த நகல்.//**

# இந்தி மொழி பற்றிய கொள்கை விளக்கம்

1-12-1956இல் இ.ம.இ.யின் பாரம்பரிய மரபுப்படி இதன் இரண்டாவது தலைவராக 1936 முதல் பொறுப்பேற்றுச் செயலாற்றி வரும் சித்தர் காகபுசுண்டர் எனும் காக்கையர் ம. பழனிச்சாமி பிள்ளையாகிய யாம் மிகத் தெளிவாகவும், விளக்கமாகவும் இந்தி மொழி பற்றிய இ.ம.இ.யின் கொள்கையை எழுதி வெளியிடுகிறோம். இந்த அறிக்கை சில ஆயிரமே அச்சிடப்பட்டாலும் இது உலகெங்குமுள்ள தமிழர் அனைவருக்கும் அனுப்பப்படுகிறது என்பதே இதன் சிறப்பு.

எமது நண்பர்களும், எம்பால் ஈடுபாடு உள்ளவர்களும் இந்திய அரசின் வெறிபிடித்த இந்தி மொழிக் கொள்கையைப் பற்றிப் பலவிதமாகப் பலமுறை என்னிடம் கேட்டதாலேயே இந்த ‘இ.ம.இ.யின் இந்தி மொழி பற்றிய கொள்கை விளக்கம்’ என்ற அறிக்கை வெளியிடப்படுகிறது. இதனை, பல்வேறு காரணங்களால், யாம், ஐந்தாம் பதிப்பாக வெளியிட்ட ‘தமிழினத் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாவது ஏன்?’ என்ற நூலோடு சேர்த்து வெளியிட முடியவில்லை. ஆனாலும், இந்த அறிக்கை அவசர அவசரமாக வெளியிடப்பட்டு; இந்த ‘தமிழினத் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாவது ஏன்?’ என்ற நூலோடு சேர்த்து அனுப்பப்படுகிறது.

இந்த கலியுகம் பிறந்து 1359 ஆண்டுகள் கழித்தே பதினெண் சித்தர்களின் சாதனைகளுக்கும், போதனைகளுக்கும் சோதனையாகப் பிறமண்ணினரான பிருமணர்கள் இமயமலையிலுள்ள கைபர், போலன் கணவாய்கள் வழியாகத் தோலால் செய்யப்பட்ட குடுவையும்,

கோவணமும், கோலுமாக இந்தியாவிற்குள் வந்தார்கள். இவர்களுடைய காட்டுமிராண்டி நிலைகளை மாற்றிடுவதற்காகவே பதினெண்சித்தர்கள் இவர்களுடைய எழுத்தற்றப் பேச்சு மொழியைத் தமிழுக்குச் சமமாகத் தமிழின் அடிப்படையில் சமசுக்கிருத மொழியாக உருவாக்கிக் கொடுத்தார்கள். அதாவது, தமிழிலுள்ள 'சமம்' என்ற சொல்லையும், வடஆரியர்களின் பேச்சு வழக்கு மொழியில் இருந்த '*கிருதம்*' என்ற சொல்லையும் இணைத்தே இந்தச் '*சமசுக்கிருதம்*' என்ற சொல் உருவாக்கப்பட்டது. அதாவது, சமம் = தமிழுக்குச் சமமாக; கிருதம் = செய்யப்பட்டது ==> **சமசுக்கிருதம்** என்ற பொருளுடைய சொல் உருவாக்கப்பட்டது.

ஆனால், இந்தச் சூழ்ச்சிக்காரப் பிருமணர்கள்; தங்களுடைய குள்ள நரிப் பண்பிற்கேற்ப; பதினெண்சித்தர்கள் படைத்துக் கொடுத்த சமசுக்கிருத மொழியைப் பயன்படுத்தியே பதினெண்சித்தர்களின் தாய்மொழியான, 'அண்டபேரண்ட அருளுலக ஆட்சி மொழி'யான தெய்வீக ஆற்றல் மிகுந்த அமுதத் தமிழ்மொழியை கரையானையும்; செல்லுப் பூச்சியையும், அந்துப் பூச்சியையும் போல் சிறுகச் சிறுக அழித்துச் சீரழித்து விட்டார்கள். அது கண்ட பதினெண்சித்தர்கள் கோபித்துச் சாபம் இட்ட காரணத்தால் செத்துப் (இறந்து, அழிந்து) போய்விட்டது இந்தச் சமசுக்கிருதம்.

ஆனாலும், இந்தக் கட்டுப்பாடும், நுட்ப மதியும், திட்டமிட்டுச் செயலாற்றும் பேராற்றலும், எதையும் இனநலனுக்காகத் தியாகம் செய்யும் தீரமும், அநாகரீகமிக்க வெறிப் போக்கும் மிகுதியாக உடைய பிறமண்ணினரான <u>பிருமணர் எனும் வடஆரியர்கள் தங்களுடைய செத்துப் போன சமசுக்கிருத மொழியை வைத்துக் கொண்டே தமிழர்களையும்; தமிழர் மதமான மெய்யான இந்து மதத்தையும்; தூய்மையும் வாய்மையும் மிக்க தமிழ் மொழியின் இலக்கிய இலக்கணங்களையும் சிதைத்தும், சீரழித்தும், பிரித்தும்,</u>

அடக்கியொடுக்கி அடிமைப் படுத்தி வருகிறார்கள். ஆனால், தமிழர்களிலேயே கணிசமான அளவு அடிமைப் புத்தி படைத்த பேராசைக்காரர்களும், பண வெறியர்களும், பதவி வெறியர்களும், புகழ் வெறியர்களும் காலங்கள் தோறும் தோன்றித் தோன்றித் தமிழின நல துரோக விரோதச் செயல்களைச் செய்ததால்தான் இந்தச் சமசுக்கிருத மொழியும், பிராமணர்களும் தொடர்ந்து வெற்றி பெற்று வருகிறார்கள்.

அதாவது, தமிழர்களுக்குள்ளேயே கணிசமான அளவினர்கள் தமிழின நலத் துரோக விரோதச் செயல்களை சுயநலத்தால் தொடர்ந்து செய்து வருவதால்தான் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதி ஆற்றங்கரைக் கருவூரார் அவர்களும்; பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களும் தோல்விகளையே பெற்றிட்டார்கள். அதாவது, இந்தச் சமசுக்கிருத மொழியால்தான் தமிழர்கள் சமுதாயரீதியாகவும், சமயரீதியாகவும் அடிமையாக்கப் பட்டிருக்கிறார்கள் [The Sanskrit language is the main cause and source for the slavery of the Tamils both in the field of Religion and Social conditions] என்பதுதான் உண்மை.

எனவே, இப்போது வடநாட்டுக் காரர்களால் அரசியல்ரீதியாகப் புகுத்தப்பட்டு வரும் இந்திமொழியால் தமிழர்கள் என்றென்றும் அரசியல் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் வடநாட்டாரிடம் நிரந்தரமான அடிமைகளாகத்தான் இருக்க நேரிடும். இன்றுள்ள காங்கிரசுக் கட்சிக்காரர்கள், தங்களுடைய புகழ் வெறியாலும், பதவி வெறியாலும், கட்சி வெறியாலும் கண்ணை மூடிக் கொண்டு இந்திமொழியை வரவேற்கிறார்கள். இவர்களை எண்ணும் போது; பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியான குருமகாசன்னிதானம்,

ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்களின் வளர்ப்பு மகனான ஈசா எனும் ஏசுநாதரின் கடைசிக்கால நிலையில்தான் இருக்க முடிகின்றது எம்மால்.

அதாவது, ஏசுநாதர் தனது சாவின் கடைசி நிலையில் தன்னுடைய மரணத்துக்குக் காரணமாக இருந்த அனைவரையும் மன்னிக்க விரும்பி; "தந்தையே! எல்லாம் வல்ல இறைவனான உமது புதல்வனாகத் தோன்றிய என்னைப் புரிந்து கொள்ளாமல் இவர்கள் செய்கின்ற பாவங்களை மன்னிப்பீராக! என்னைக் கொடுமைப் படுத்தியவர்களைத் தண்டித்துவிட வேண்டாம்" என்று வேண்டுகோள் விடுத்துக் கொண்டார்.

அதைப் போலவே, யாம் வருங்காலத் தமிழின மக்களை,

"இந்தக் காங்கிரசுக் காரர்களை மன்னித்து விடுங்கள். இவர்கள், தாங்கள் என்ன செய்கிறோம் என்றே தெரியாமல்; தமிழகத்துக்குரிய திருப்பதி, தேவிகுளம், பீர்மேடு, கன்னியாகுமரி (நாகர்கோயில்) மாவட்டப் பகுதிகள், சேலம் மாவட்ட ஓசூர் பகுதிகள் ...... முதலிய பலவற்றைப் பிற மாநிலங்களுக்குத் தானமாக வழங்கி விட்டார்கள். இவர்கள், தமிழ்மொழியையும், கல்வி கற்கும் இளைஞர்களின் அறிவையும், தமிழரின் தன்மானத்தையும், தமிழ்நாட்டையும் இந்திமொழியால் சிதைத்துச் சீரழித்துச் சின்னாபின்னப் படுத்தி அடிமை நிலைக்குக் கொண்டு செல்கிறார்கள்.

"இந்திமொழியை ஆட்சி மொழியாக ஒப்புக் கொண்டதின் மூலம் தமிழ்நாட்டின் அனைத்து வகையான தொழில் வளங்களையும், பொருளாதார நிலைகளையும், தமிழ்நாட்டு வாணிகத்தையும் இந்திக் காரர்கள் தங்கள் விருப்பம் போல் கொள்ளையடிக்க வாய்ப்பு வசதிகளை உருவாக்கி விட்டார்கள். இவற்றால் வருங்காலத்தில் இந்திக்காரர்களின் குருதியை ஆறாக ஓடவிட்டும்; தமிழகத்தின் தெருக்கள் தோறும், ஊர்கள் தோறும் இந்திக்காரர்களின் பிணங்களை

மலைமலையாகக் குவித்தும்; ஒரு கடிய கொடிய நெடிய உள்நாட்டுப் போர் நிகழ்வதற்கு வழிவகை செய்து விட்டார்கள் இந்தக் காங்கிரசுக்காரர்கள். எனவே இந்த அப்பாவிகளை, ஏமாளிகளை, கட்சிவெறி பிடித்த அடிமைப் புத்திக்காரர்களை; இனப்பற்றோ, மொழிப்பற்றோ, நாட்டுப்பற்றோ இல்லாத கோமாளிகளை; வருங்காலத் தமிழக மக்களே! மன்னித்து விடுங்கள், மன்னித்து விடுங்கள், மன்னித்து விடுங்கள்.

ஏனெனில், இந்தக் காங்கிரசுக் காரர்களில் பெரும்பாலானவர்கள் தாங்கள் என்ன செய்கிறோம் என்றே தெரியாமல் செயல்படுகின்ற நல்லவர்களாகவே இருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் இவர்களில் பெரும்பாலானவர்கள் ஏற்கெனவே பிராமண அடிமைகளாகவும், சமசுக்கிருத அடிமைகளாகவும், பொய்யான ஹிந்துமத அடிமைகளாகவும், ஆங்கில அடிமைகளாகவும் வாழுகின்ற கோழைகளாகவும், ஏழைகளாகவும், படிப்பறிவற்ற பாமரர்களாகவும் இருக்கிறார்கள்.

எனவே, இந்தி மொழியை எதிர்ப்பதாக எண்ணிக் கொண்டு கடந்தகால, நிகழ்கால காங்கிரசுக் காரர்களைக் கண்மூடித்தனமாகத் திட்டித் தீர்த்து விமரிசனம் செய்வதில் காலத்தைக் கடத்தாதீர்கள். இந்தியை எதிர்ப்பதற்காக இந்தி மொழி பேசாத இந்திய மாநிலத்தவர் அனைவரையும் ஒன்று திரட்டுங்கள். அதன் மூலம் ஒரு கூட்டு முயற்சியை உருவாக்கி; இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தைத் திருத்தி, இந்தியாவிலுள்ள அனைத்து மொழிகளையும் சட்டப்படி அரசியல் மொழியாக்கிடுங்கள். இந்தியாவின் மத்திய அரசு அலுவல்களில் அனைத்து மாநிலங்களுக்கும் சமமான வாய்ப்பு வசதிகளைத் தர வேண்டுமென்ற நீதியைச் சட்டமாக்குங்கள். அதன் மூலம் தேர்வு, திறமை என்ற பெயரால் குறிப்பிட்ட வகுப்பினரும் ஒரு சில மாநிலத்தினரும் மட்டுமே இந்திய மத்திய அரசில்

வேலைவாய்ப்பு வசதிகளைத் துய்த்துக் கும்மாளமிடும் அநீதியைத் தடுக்க முடியும்.

இதேபோல், இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாநிலத்தினரும் அடுத்தடுத்து இந்தியக் குடியரசுத் தலைவராகவும், பிரதம மந்திரியாகவும் பதவியேற்க வேண்டுமென்ற நியதியைச் சட்டமாக்குங்கள். அதனால், ஒரே மாநிலத்தவர் மற்ற மாநிலத்தவர்களை அடிமையாக்கிச் சுரண்டிச் சுகபோக வாழ்வு வாழும் பித்தலாட்டத்தனமான, அயோக்கியத்தனமான, காட்டுமிராண்டித்தனமான, பாசிசச் சர்வாதிகாரப் போக்கு தடுக்கப்பட்டிடும், தடுக்கப்பட்டிடும், தடுக்கப்பட்டிடும்; ஒழிக்கப்பட்டிடும், ஒழிக்கப்பட்டிடும், ஒழிக்கப்பட்டிடும்.

எனவே, **'இந்தி மொழியை எதிர்ப்பது என்பது இந்திக்காரர்களை எதிர்ப்பதேயாகும்'** என்ற தத்துவத்தினை நன்கு தெரிந்தும், புரிந்தும், உணர்ந்துமே இந்தி எதிர்ப்புப் போராட்டங்களும், போர்களும் நிகழ்த்தப்படல் வேண்டும். அதாவது, இந்தி எதிர்ப்பு என்பது சாதாரணப் போராட்டங்களாலேயே முடிவுக்குக் கொண்டு வரப்பட்டிட முடியுமா? அல்லது பெரிய பெரிய போர்களுக்குப் பிறகுதான் இந்தி எதிர்ப்பு முயற்சி நிறைவு பெற முடியுமா? என்பதைத் தமிழ்நாட்டுக் காங்கிரசுக் காரர்களும், இந்திய நாட்டுப் பிருமணர்களும், இந்தி வெறியர்களும்தான் அவசியமாகவும், அவசர அவசரமாகவும் சிந்தித்து முடிவு செய்ய வேண்டும். இல்லாவிட்டால் இந்தி எதிர்ப்புப் போராட்டம் என்பது இந்திக்காரர்களையே எதிர்க்கும் பெரும் போராகவே மாறிடும். அந்தப் போரில் அப்பாவியான, ஏமாளியான, நல்லவர்களான காங்கிரசுக் காரர்களில் பெரும்பாலானவர்களும், சூழ்ச்சிக்காரப் பிருமணர்களில் பெரும்பாலானவர்களும், சுயநலக்கார வெறியர்களான இந்திக்காரர்களில் பெரும்பாலானவர்களும் அநியாயமாக அழிய நேரிடும், அழிய நேரிடும், அழிய நேரிடும், அழிய நேரிடும்.

எனவே, ஒவ்வொரு தமிழனும் தமிழனின் தன்மானத்துக்காக, தமிழனின் தன்னம்பிக்கைக்காக, தமிழனின் ஒற்றுமைக்காக, தமிழனின் ஒருமைப் பாட்டுக்காக, தமிழனின் பண்பாட்டு விடுதலைக்காக எப்பாடுபட்டாவது இந்தியையும், சமசுக்கிருதத்தையும் எதிர்த்துப் போராடியே தீர வேண்டும். அல்லது சமசுக்கிருதப் பிருமணர்களையும் இந்திக்காரர்களையும் எதிர்த்திடும் போரில் இயங்கியேதாணுக வேண்டும்."

இந்த முடிவைத்தான் அருள் உள்ளத்தோடும், அறிவார்ந்த இரக்கச் சிந்தனையோடும் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கொள்கையாக அறிவிக்கிறோம் யாம். **தமிழனுக்கு சமசுக்கிருதமும் வேண்டாம், இந்தியும் வேண்டாம், ஆங்கிலம் ஒன்றே போதும்** - என்பதுதான் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கொள்கை. ஏனெனில், இந்துமதத்தின் மூலவர்களாகவும், காவலர்களாகவும் இருப்பவர்கள் தமிழர்களே.

**சித்தர் காகபுசுண்டர் எனும்**
**காக்கையர் ம. பழனிச்சாமி பிள்ளை,**
**முடிகணம் எனும் முடிகண்ட சோழபுரம்,**
நாள்: 1-12-1956.

**//உண்மை நகல்//**

**//மூலம்: சித்தரடியான் திரு ப.செயபால் அவர்களின் கையெழுத்தில் இருந்த நகல். நகலில் இறுதிப் பக்கம் இல்லை என்பதால் அச்சிட்ட புத்தகத்தில் இருந்த இக்கட்டுரையின் பகுதியிலிருந்து அது நிரப்பப்பட்டது.//**

# இ.ம.இ.யின் சமசுக்கிருத மொழி பற்றிய கருத்து

கி.மு. 100 முதல் கி.பி. 150 வரை வாழ்ந்த பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூறூர்தான் முதன்முதலில் பிறமண்ணினரான பிருமணர் எனும் வடஆரியர் பற்றியும்; அவர்களுடைய வேதமதத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பொய்யான ஹிந்து மதம் பற்றியும்; சித்தர்களால் தமிழின் அடிப்படையில் பிருமணர்களின் எழுத்தற்ற ஆரிய மொழி எழுத்து வளமும் இலக்கிய இலக்கண வளமும் உடைய சமசுக்கிருத மொழியென்று ஒரு புதுமொழியாகத் தோற்றுவிக்கப்பட்டது என்பதையும் மிகத் தெளிவாகக் குறித்துள்ளார்.

சூழ்ச்சித் திறமிக்க பிருமணர்கள் சித்தர்களால் படைக்கப்பட்ட இந்தச் சமசுக்கிருத மொழியை வைத்துக் கொண்டே அண்டபேரண்டமாளும் அருளுலக ஆட்சி மொழியான தெய்வீகத் தமிழைக் கெடுக்க முற்பட்டார்கள் என்பதையும்; அதாவது சமசுக்கிருத மொழிக்காக சித்தர்களால் படைக்கப்பட்ட ஷ, ஜ, ஹ, ஸ, ... முதலிய எழுத்துக்களையும், வடஆரியர்களின் பேச்சு வழக்கிலிருந்த சொற்களையும் மிகுதியாகத் தமிழில் புகுத்தினர்கள் என்பதையும் மிகத் தெளிவாகத் தமது குறிப்புகளில் வெளியிட்டுள்ளார்.

மேலும், இதே போல் தமிழிலக்கியத்திலிருந்த நல்ல இலக்கியங்கள் அனைத்தையும் காட்டுமிராண்டித்தனமான கற்பனைகளாலும், ஆபாசச் செய்திகளாலும், அருவருக்கத்தக்க கருத்தோட்டங்களாலும் சிதைத்துச் சீரழித்துப் பாழாக்கி விட்டார்கள் என்பதையும்; இவற்றிற்கெல்லாம் மேலாக, தமிழ்மொழியே சித்தர்களால் ஆயிரமாண்டு இடைவெளிக்குள் உருவாக்கிக் கொடுக்கப்பட்ட சமசுக்கிருத மொழியிலிருந்துதான்

<u>தோன்றியது என்ற பொய்யைக் கூறி மாபெரும் குழப்பங்களை விளைவித்து விட்டார்கள்</u>. அதாவது, சமசுக்கிருத மொழியின் எழுத்துக்களாலும், சொற்களாலும், இலக்கிய, இலக்கணங்களாலும், பதினெண்சித்தர்களின் சித்தர் நெறியான சீவநெறியெனும் இந்துமதத்தைச் சிதைத்துச் சீரழித்துப் பாழாக்கிப் பயனற்றதாக்கி விட்டார்கள்.

எனவேதான், **பதினெண்சித்தர்களுடைய இந்துமதத்திற்கு மெய்யான இந்துமதம்** (இது ஏட்டளவில்தான் முழுமையான வடிவிலிருக்கிறது) என்றும், பிறமண்ணினரான பிருமணர் எனும் வடஆரியர்களால் சிதைத்துச் சீரழிக்கப்பட்டுப் பாழாக்கப்பட்டுப் பயனற்றதாக்கப்பட்ட இந்துமதத்தைப் *பொய்யான ஹிந்துமதம்* என்றும் பெயரிட்டார். இவரே, மெய்யான இந்துமதத்தின் மறுமலர்ச்சிக்காகவும், வளவளர்ச்சிக்காகவும், ஆட்சிமீட்சிக்காகவும், “இந்து மறுமலர்ச்சி இயக்கம்” என்ற ஒரு இயக்கத்தையே தோற்றுவித்தார் என்பதையும்; இந்த இயக்கத்தின் மூலமே தெய்வீக அமுதத் தமிழைச் சமசுக்கிருத மொழியின் ஆட்சியிலிருந்து முழுமையாக விடுவிக்க வேண்டும், விடுவிக்க வேண்டும், விடுவிக்க வேண்டும்! என்று கூறியதையும் நினைத்துப் பார்க்க வேண்டியிருக்கிறது.

மேலும், பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் [கி.பி. 785 - கி.பி. 1040] அவர்கள் தமக்கு முன் வாழ்ந்த அமராவதியாற்றங்கரைக் கருவூரரின் சமசுக்கிருத மொழி பற்றிய கருத்தை அடிப்படையாகக் கொண்டே பிறமண்ணினரான பிருமணர் எனும் வடஆரியர்களின் பிடியிலிருந்து தமிழரை விடுவிப்பதற்காகவே அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை [கி.பி.785 - கி.பி.1279] உருவாக்கினர் என்பதையும் நினைத்துப் பார்க்க வேண்டியிருக்கிறது.

எனவே, “தமிழர்களுக்கு விடுதலை வாழ்வு, மொழியுரிமை வாழ்வு, பண்பாட்டுப் பெருமை வாழ்வு, தன்னம்பிக்கை வாழ்வு,......

முதலியவையெல்லாம் மீண்டும் கிடைத்திட வேண்டுமென்றால் நேரடியாகவே சமசுக்கிருத மொழியின் ஆட்சிநிலைகள் அனைத்தையும் எதிர்த்துப் போரிட்டு அழித்து ஒழித்தேயாக வேண்டும். இந்த மொழிப்போர், நேரடியாகவே பிருமணர்களுடன் நிகழ்த்தப்பட வேண்டிய ஒன்றாகி விட்டால், பிற்காலச் சோழப் பேரரசின் தந்தையாகிய குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் எண்ணற்ற போர்க்களங்களில் குருதி மழையில் நீராடியும், குருதி ஆற்றில் நீந்தியும் வாழ்ந்தவராக இருந்தும் கூட மேற்படி சமசுக்கிருத எதிர்ப்புப் போரில் திடீரென்று செயல்நிலைகளையெல்லாம் கைவிட்டு விட்டு நிலவறைக்குள் சென்றது போல் இந்த இருபதாம் நூற்றாண்டிலும் சமசுக்கிருத எதிர்ப்புப் போர் தோற்றுவிடக் கூடாது………” என்று கருவூரார் வழிவந்த கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ. இராமசாமிப் பிள்ளை அவர்கள் கி.பி. 1772-இல் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தைத் தோற்றுவித்து வழங்கிய மேற்படி கொள்கை விளக்க வாசகத்தையே என்றென்றும் கொள்கை விளக்கமாக வழங்க வேண்டுமென்ற ஆணையைப் [ஏளனம்பட்டியாரின் ஆணையை] பின்பற்றியே இந்தக் கொள்கை விளக்கம் சமசுக்கிருத மொழி பற்றி இன்றும் வழங்கப்படுகிறது. இதுவே, இ.ம.இ.யின் கொள்கை விளக்கமாக மரபு பற்றி வழங்கப்படுகிறது.

**இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் இரண்டாவது தலைவர்.**
**சித்தர் காகபுசுண்டர் எனப்படும் காக்கையர் ம.பழனிச்சாமி பிள்ளை,**
**காக்காவழியன் பண்ணையாடி,**
**முடிகணம் எனப்படும் முடிகண்ட சோழபுரம்,**
**கரூர் வட்டம், திருச்சி மாவட்டம்.**

**//உண்மை நகல்//**
**//மூலம்: சித்தரடியான் திரு செகதீசன், மற்றும் சித்தரடியாள் திருமதி கார்த்தியாயினி இவர்களின் கையெழுத்தில் இருந்த நகல்.//**

ஓம்

# தமிழ் வழி இன விடுதலை

## கவிஞன் - ஆண்டான்

1. விற்பண்ணனுக மறைமுறை நெறிவேதங்கள் ஆக்கினுய்.
2. அற்பசொற்பங்களேச் சமாளிக்க ஆயுளே சரியாகுமோ?
3. நற்பயனுல் இயற்றும் தவம் வேள்வி காத்திடுகின்றன.
4. உற்ருர் உறவினர் சொந்த பந்தம் மறந்தென்ன கடமை பெருகுதே.
5. சிற்பங்களில் ஓவியங்களில் காவியங்களில் வாழ்ந்தென்ன?
6. அற்புதச் சித்திகள் அளவிறந்து அடைந்தென்ன?
7. உற்றதை உணர்த்தத் தயக்கமே மயக்கமே.
8. பெற்றதை விற்று வாழவா இப்பிறவி?
9. கற்றதை மறைத்து கைகட்டியிருப்பது எப்படியோ?
10. இன்றைக்கே சித்தியெலாம் தந்திடு சிவமே.
11. பற்றிலானும் மொழி இன நாடு பற்றித்தான் எண்ணுவான்.
12. அற்றது ஆசையானுலும் பெற்ற தாய்மொழி இனம் நாடு பேண வேண்டாமா?
13. நற்றவமிகுதியும் மதப்பற்ருல் ஊழித்தீயாக மாற்றமாகுதே.
14. எற்றுக்கு வெற்றுச்சிந்தை வீரநெஞ்சமிருக்கு கவலேயில்லேயே.
15. பற்றுக்கு உரிய செயலால் பசிய தலேமாலே பூண்ட பராசத்தி ஆகிறேன்.
16. முற்றும் உணர்ந்த முனிகளால் மூண்டிடும் விடுதலேப்போர்.
17. சற்றும் இதைத் தளர்த்தவோ மாற்றவோ இயலாது.

18. அற்பர்கள் ஆகாதீர் மொழியுணர்வு உறுவீர், இனவுணர்வு உறுவீர், நாட்டுணர்வு உறுவீர்.
19. வெற்புறை கடவுள்களோடு துவக்குவோம் வீரப்போர்.
20. அற்பராம் அன்னியக் கங்காணிகளை முறியடிப்போம்.
21. சொற்பப் பயனுக்காக அனைத்தையும் அடிமையாக்கிடுதலைத் தடுப்போம்.
22. அற்றிடச் செய்வோம் போலிநிலை கூலிநிலை அன்னியருறு வேலிநிலை.
23. நற்றமிழர் கூட்டம் பெற்றிடட்டும் இனவுணர்வு மொழியுணர்வு.
24. பெற்றிடட்டும் இவர் தன்னம்பிக்கை தன்மானம் ஒற்றுமை.
25. உற்ற தமிழுணர்வால் கல்வியனைத்தும் பயிலட்டும் தமிழில்.
26. கற்ற தமிழால் அங்காடி முதல் அரசியல்வரை நடக்கட்டும்.
27. பெற்றிடு தமிழ்ப் பற்றே மீட்டுத் தரும் உரிமைகள் அனைத்தையும்.
28. மற்றவர் மொழியால் இனமானமற்ற ஈனவாழ்வே விளைந்திட்டது.
29. சற்றிதைச் சிந்திப்பீர் சகலரும் தமிழராவீர்.
30. போற்றும் தாய்மொழி இனப் பற்றே வறுமை வெறுமை அழித்துக் காக்கும்.
31. எற்றுக்கு அடமானநிலை அடிமைநிலை கங்காணிநிலை?
32. முற்றிலும் இவற்றை மாற்ற வல்லது மொழிவிடுதலையே இனவிடுதலையே.
33. சுற்றிலும் சிறுதொகையினர் தனிநாடுற்று வாழ்ந்திட;

34. ஒற்றுமை இலாத் தமிழரே நாடோடி, இலம் பாடியாய் நலிகின்றனர்.
35. நாற்றமிகுநிலே இதே; நாண வேண்டாமா? சீற்றமுற்றிட வேண்டாமா? சிந்தித்திட வேண்டாமா?
36. நற்றமிழர் சமய விழிச்சியே சமுதாய விழிச்சியாகி அரசியல் செழிச்சியாகட்டும்.
37. இற்றிதனே உணரார் வெற்றுக்கு வாழ்வார் ஆவார்.
38. முற்றும் உணர்ந்தோரே தமிழ் செழிக்க உழைக்க வாரீர்.
39. தமிழே தமிழின விடுதலே பெற்றுத் தந்திடும்.
40. அமிழ்தத் தமிழின் அவ்வரிய ஆற்றலேப் போற்றுவீராகுக.
41. வாழ்க தமிழ்! வளவளர்ச்சியுறுக தமிழ்! ஆட்சிமீட்சி பெறுக தமிழ்! அருளுலகு ஆளட்டும் தமிழ்!

**இக்கவிதை சித்தர் காக்கையர் காகபுசுண்டர் ம.பழனிச்சாமிப் பிள்ளே அவர்களின் கருத்து வாசகங்களிலிருந்து ஞாலகுரு சித்தர் கருவூரால் வழங்கப் பட்டது.**

நகல் நல்கியவர்:-

'சித்தர் மகள்' தனபாக்கியம்.
க/பெ சித்தரடியார் பழ.கோபால்
சிறுமுகை.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: சிறுமுகைச் சித்தரடியாள் திருமதி தனபாக்கியம் அவர்களின் கையெழுத்தில் இருந்தது. இதற்கு வேம்படிதாளம் சித்தரடியார் திரு இரா.சீனிவாசன் அவர்கள் எழுதிய நகலும் கிடைத்தது.//**

# சித்தர் செயல்படும் காலமிது

"சித்தர் வரும் தருணமிது" என்ற அருளாளர்களின் அறிவிப்பு மெய்யாகச் "சித்தர் செயல்படும் காலமிது" என்று அடியான்களும், அடியாள்களும், அடியார்களும் அறிவிப்புச் செய்யும் நற்காலம் வந்துவிட்டது.

"அருளுலக இருள்களையும், அவலங்களையும், மாயங்களையும், கற்பனைகளையும், தவறுகளையும், மடமைகளையும், சுரண்டல்களையும், முதலாளித்துவத்தையும், எதேச்சாதிகாரங்களையும், சர்வாதிகாரங்களையும், ஏற்றத்தாழ்வுகளையும், வேறுபாடுகளையும், கடுமைகளையும், கொடுமைகளையும் .... முழுமையாக அகற்றும் மாவீரர் படை தயாராகி அருட்போர் ஆரம்பமாகி விட்டது.

இதன் வெற்றிக்குப் பின், இம்மாபெரும் படை, பொருளுலகக் குறைகள், ஏக்கங்கள், தேக்கங்கள், முடக்கங்கள், அடக்கு முறைகள், கேவலங்கள், இல்லாமைகள், இயலாமைகள், பற்றுக் குறைகள், ஊழல்கள், உறிஞ்சல்கள், சூழ்ச்சிகள், சூறைகள், கள்ளச் சந்தைகள்..... முதலிய அனைத்தையும் அகற்றிச் சித்தர்களின் 'சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்' அமைத்திடும்.

அதற்காக மிக நெடிய போர் அறவழியில் நிகழும். ஆனால், சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கும் மக்கள் கிளர்ந்தெழுந்து ஊழிப் பெருவெள்ளம் போல் .... செயல்பட நேரிட்டாலும் நேரிடலாம். அதனைக் கடவுளின் கட்டளையாகக் கருதவே நேரிடும் ....."

**// 'பிறந்த நாள் செய்தி' என்ற தலைப்பில் 16-10-1982இல் குருதேவர் எழுதிய அஞ்சலிலிருந்து எடுக்கப்பட்ட பகுதி. //**

**"அருளுலகில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்"** -- குருபாரம்பரிய வாசகம்.



"... இம்மண்ணுலக அருளாளர் வரிசையிலேயே முதன்முதல் அரசயோகத்தைத் துவக்கி மிகப்பெரிய வெற்றி நிலைக்குரிய சாதனை நிலையைத் தோற்றுவித்தவரும்; கருவறைக் கோபுரமுடைய **தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டியவருமான பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களே** போர்க்கோலம் பூண்டு, படை நடத்தி, வேலோச்சியும், வாள் வீசியும், அத்திறங்கள் எய்தும், குருதியாறு ஓடவிட்டும்தான் 'இந்து மறுமலர்ச்சி இயக்கம்' வெற்றி பெறுமாறு செய்தார். ... ..."

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்** அவர்களின் குருவாணைப் படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் உள்ள, எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

www.newsletters.gurudevar.org www.gurudevar.org
www.induism.org *Email:* indhuism@gmail.com

www.books.gurudevar.org